## பாடம் - 16

## الدرس السادس عشر

### நபிகளார் வரலாற்றிலிருந்து முக்கிய நிகழ்வுகளும், படிப்பினைகளும் (தொடர்ச்சி)

### تابع مواقف وعبر من سيرته ﷺ

**மனைவியிடம் நடந்து கொண்ட விதம் -** நபியவர்கள் தமது மனைவியிடம் நடந்து கொண்ட விதத்தைப் பொறுத்தவரை அதில் அனைத்து நற்குணங்களும் அமைந்திருந்தன. நபியவர்கள் பணிவு மிக்கவர்களாக இருந்தார்கள். தமது மனைவியின் தேவையை நிறைவேற்றுவதற்கு எப்போதும் தயாராக இருப்பார்கள். மனிதாப முறையில் ஒரு பெண்ணுக்கு உள்ள கௌரவத்தையும் தாய், மனைவி, மகள் எனும் முறையில் உள்ள அந்தஸ்தையும் மதிப்பார்கள்.

ஒரு மனிதர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம், நான் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு மனிதர்களில் மிகத்தகுதியானவர் யார்? என்று கேட்ட போது 'உனது தாய், பிறகும் உனது தாய், பிறகும் உனது தாய், அதன் பிறகு தான் உனது தந்தை' என்று கூறினார்கள். (பார்க்க: புகாரி-5971, முஸ்லிம்-2548)

'ஒருவருக்கு பெற்றோரில் ஒருவரோ இருவருமோ இருந்து அவர்களிடம் அவர் நல்ல முறையில் நடக்காமல் மரணித்து விட்டால் அவர் நரகம் செல்வார்ளூ அல்லாஹ் அவரை தனது அருளை விட்டும் தூரமாக்கிவிடுவான்' என்றும் கூறியுள்ளார்கள். (பார்க்க: அஹ்மத்-18254)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மனைவி அருந்திய பாத்திரத்தை வாங்கி அவர்கள் வாய் வைத்த இடத்தில் வாய் வைத்து அருந்துவார்கள். 'தன் மனைவியிடத்தில் சிறந்தவரே உங்களில் சிறந்தவர். நான் என் மனைவியிடத்தில் சிறந்தவனாவேன்!' என பெருமையுடன் கூறுவார்கள். (பார்க்க: திர்மிதி-3895, இப்னுமாஜா-1977)

**நபிகளாரின் அன்பும் கருணையும் -** கருணை பற்றி நபிகள் நாயகம் (ஸல்) இவ்வாறு கூறினார்கள். 'கருணை காட்டுபவர்களுக்கு அல்லாஹ் கருணை காட்டுகிறான். பூமியிலுள்ளவர்களுக்கு கருணை காட்டுங்கள்ளூ வானிலுள்ளவன் உங்களுக்கு கருணை காட்டுவான்.' (பார்க்க: அபூதாவூத்-494௯, திர்மிதி-1924)

நபிகள் நாயகத்திடம் இம்மகத்தான பண்பு மிக அதிக அளவில் இருந்தது. சிறுவர், பெரியவர், உறவினர், அந்நியர் என அனைவருடனும் அவர்கள் நடந்துகொண்ட முறைகளில் இது மிகத்தெளிவாகவே வெளிப்பட்டிருக்கிறது. அவர்களின் அன்பு மற்றும் கருணையின் வெளிப்பாட்டுக்கு இதோ ஒரு சான்று!

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குழந்தை அழும் சப்தத்தைக் கேட்டால் தம்முடைய தொழுகையை நீட்டிக் கொண்டிருக்காமல் சுருக்கி விடுவார்கள். 'நான் தொழுகையை நீட்டித் தொழ வைக்க வேண்டும் என்று நினைத்து தொழுகையில் நிற்கும்போது குழந்தை அழும் சப்தத்தைக் கேட்பேன். உடனே அதன் தாயாருக்கு நான் சிரமம் கொடுப்பதை விரும்பாமல் எனது தொழுகையை சுருக்கிவிடுவேன்' என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறியதாக அபூகதாதா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (பார்க்க: புகாரி-707, முஸ்லிம்-470)

தம் சமுதாயத்தின் மீது அவர்கள் கொண்ட அன்புக்கும் அவர்கள் இறைமார்க்கத்தில் இணைய வேண்டும் என்ற அவர்களின் பேராவலுக்கும் மற்றுமொரு சான்று: நபிகளாருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த ஒரு யூதச் சிறுவன் நோய்வாய்ப்பட்டான். நபிகள் நாயகம்(ஸல்) நலம் விசாரிப்பதற்காக அவனிடம் வந்தார்கள். அவனது தலைப் பக்கம் அமர்ந்து 'நீ இஸ்லாத்தை ஏற்றுக்கொள்' எனக் கூறினார்கள். அச்சிறுவனோ தனது தலைமாட்டில் நின்றதன் தந்தையை ஏறிட்டுப்பார்த்தான். அபுல்காஸிமுக்கு (நபிகளாரின் புனைப் பெயர் இது.) நீ கட்டுப்படு என்று அவனது தந்தை கூறினார். உடனே அச்சிறுவன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டான். பிறகு சிறிது நேரத்தில் அவன் இறந்து விட்டான். 'இவனை நரகத்திலிருந்து காப்பாற்றிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்' என்று கூறியவாறு நபிகள் நாயகம் அங்கிருந்து வெளியேறினார்கள். (பார்க்க: புகாரி-1356)